1967 ஜூலை 7]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அது போன்ற விண்ணப்பங்கள் வருமானால் பரிசீலிக்கப்படும் என்று ஏற்கனவே சொன்னேன். அரசாங்கம் திருப்பியனுப்புவதாகச் சொல்கிறார்கள். ஒரு வேளை கடந்த காலத்தை நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்கள் என்று கருதுகிறேன். இப்போது இது போன்ற நிலைமைகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அதன் மேல் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

மாட்டுச் சாணத்திலிருந்து எரி பொருள்

* **199 வின.—திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாட்டுச் சாணத்திலிருந்து எரி பொருள் தயாரிப்பதற்கான ஏற்பாடு ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) மாட்டுச் சாணத்திலிருந்து எரி பொருள்வாயு தயாரிக்கும் சாதனங்கள் கிராம காதி தொழில் போர்டாரால் செய்யப்பட்டு கீழ்க்கண்ட நிறுவனங்கட்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன. இச் சாதனங்ள் கடன் மான்யம் பேரில் வழங்கப்பட்டுள்ளன.

(1) காந்தி கிராம அபிவிருத்தி நிலையம் மதுரை.

(2) கிராம அபிவிருத்தி நிலையம். எஸ்.வி. நகரம், வடார்காடு மாவட்டம்.

(3) கிராம அபிவிருத்தி நிலையம், பவானிசாகர், கோவை மாவட்டம்.

(4) தண்டாயுதபாணி தேவஸ்தானம், பழனி.

(5) ராமலிங்கம் டி.பி. சானிடோரியம். பெருந்துறை, கோவை.

(6) ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலாயா (விவசாயப் பள்ளி, பெரியநாயக்கன்பாளையம், கோவை.

மேற்குறித்த இடங்களில் இச்சாதனம் பயன்பட்டு வருகிறது.

இது தவிர, அரசாங்க விவசாய இலாக்காவில் ஒரு திட்டம் பரிசீலனையில் இருந்து வருகிறது. மேற்சொன்ன இடங்களில் இத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது, மற்றும் இத்திட்டத்தால் ஏற்படும் சாதனைகள் ஆகிய உண்மைகளை அறிந்தவுடன் அத்திட்டத்தை இவ்விலாகா மேற்கொள்வதற்கான செயல்கள் முடிவாக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதனால் எந்த அளவுக்குச் சாதனைகள் சாதிக்கப்பட்டிருக்கின்றன ? இனிமேல் எந்த அளவுக்குச் சாதிக்க முடியும் என்று விவரமாகக் கூறமுடியுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இப்போதுதான் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. சாதனைகளை, பலன்களைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஒரு சாதனத்தை அமைக்க 450 ரூபாய் செலவாகிறது. மேற்கொண்டு நடைமுறைச் செலவுகள் எதுவும் இல்லை. நல்ல முறையில் பயன்படுத்தப்படுமானால் 20 ஆண்டுகள் பயன்படுத்த முடியும் என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அளவுக்குத்தான் தகவல்கள் இருக்கின்றன.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : இந்தத் துறையிலே நான் கொஞ்சம் நீண்ட நாள் அனுபவம் உள்ளவன். என்னுடைய வீட்டிலேயே கடந்த 20 ஆண்டுகளாக இந்த 'காஸ்' உற்பத்தி செய்து சகல வேலைகளையும் செய்து வருகிறோம். இதைப்பற்றிச் சில விளக்கம் சொல்ல வாய்ப்புக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வதை, கேள்வியாகப் போடுங்கள்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : இது மிகவும் லாபகரமாக இருக்கும். உண்மையிலேயே இந்தத் துறை ஒழுங்காகப் பயன் படுத்தப்படவில்லை. இது நம்முடைய கற்பகத் தருவோ, காமதேனுவோ என்று சொல்லத்தக்க அளவுக்கு உணவு உற்பத்திக்கும் மற்றப் பல துறைகளுக்கும் வாய்ப்பாக இருக்கும். சாணத்தில் இருக்கக்கூடிய கெட்ட குணங்கள் மாற்றப்பட்டு பல மடங்கு சக்தி வாய்ந்த "காஸ்" பெற முடியும். இதற்கு அரசாங்கம் அதிகமான வாய்ப்புக் கொடுக்கவேண்டும். மாதவரத்தில் உள்ள சாணத்தைக்கொண்டு மின்சாரத் தடை வந்தால் கூட தாங்கக் கூடிய அளவுக்கு அதிலிருந்து சக்தியை உண்டாக்க முடியும். நான் முன்தினம் மாதவரம் சென்று பார்த்து வந்தேன். இதற்கெல்லாம் அரசாங்கம் வாய்ப்புக் கொடுத்தால் அரசாங்கம் மிக நல்ல முறையில் அவற்றை இந்த நாட்டின் ஆக்கத்திற்குப் பயன்படுத்த முடியும். இப்போது அமைச்சர் அவர்கள் சொன்ன பல இடங்களில் அந்தத் திட்டம் நல்ல முறையில் இயங்குவதில்லை. அதிலே அக்கறையுள்ளவர்களாக இல்லாமையால் நல்ல நிபுணர்களைக் கொண்டு கவனிக்காததால் அங்கெல்லாம் நல்ல நிலைமையில் இல்லை. நான் இந்தச் சாதனத்தைப் பல இடங்களில் ஒழுங்கு செய்து கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களுடைய கேள்வி என்னவென்றால், 'சாணத்தில் இருந்து வாயுவை உண்டாக்கி எரிபொருளாகப் பயன்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டு விஸ்தரிக்க ஏதாவது வழி இருக்கிறதா ?' என்பதாகும்.